**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C.No. 69/2025**

**Deposition of Witness for Petitioner PW2 (LW2)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **நிவேதா** |
| **Father's Name** | : | **ஜோகி** |
| **Village** | : | **கன்னேரிமுக்கு** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **கூலி வேலை** |
| **Age** | : | **34** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**17.02.2026** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 12.35 PM (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். வெளிச்சம் finance–ல் குழந்தைகள் பள்ளி செலவுக்காக ரூ. 4,00,000/– பணம் நான் வாங்கினேன். 10–ம் தேதி தவணையாக ரூ. 16,117/– கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். தவணைத் தொகையாக நாங்கள் தொடர்ந்து கட்டி வந்தோம். எனக்கும் எனது கணவருக்கும் உடல்நிலை சரியில்லை என்பதால் ஜீன் மாதம்

தவணைத் தொகை கட்ட முடியாமல் போனது. 2 நாட்கள் கட்டிவிடுவதாக 2ம் எதிரி நவீனிடம் சொல்லியிருந்தேன்.

2. 11.06.2025ம் தேதி மாலை 04.00 to 04.30 மணிக்கு என் வீட்டிற்கு 5 நபர்கள் வந்தார்கள். அதில் சதீஷ், யாபேஷ், நவீன் ஆகியோர்கள் லோன் காசு கொடு என்று என் கணவரிடம் கேட்டார்கள். அதற்கு நான், நான்தான் 2 நாட்கள் டைம் கொடுங்கள் என்று கேட்டிருந்தேன், அதற்குள் எதற்காக வீட்டிற்கு வந்து கேட்கிறீர்கள் என்று கேட்டேன். 1ம் எதிரி யாபேஷ் பேசிக்கொண்டிருக்கும்போதே என் கணவரின் வாயில் குத்திவிட்டார். மற்ற 2 எதிரிகளும் என் கணவரின் கழுத்தை பிடித்து, தேவுடியா பயலே காச ஒழுங்கா கட்ட மாட்டியா என்று திட்டினார்கள். 2 நாட்களில் நானே வந்து காசை கட்டிவிடுகிறேன் போங்கள் என்று சொன்னதையும் கேட்காமல் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்கள். இது சம்பந்தமாக என் கணவர் கோத்தகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் 1 மற்றும் 2 தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எத்தனை மணிக்கு கோத்தகிரி காவல் நிலையம் வந்தோம் என்றால் 05.00 மணி இருக்கும். வந்த உடனே புகார் கொடுத்துவிட்டோம். என் கணவர் கொடுத்த புகாரில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்தபோது விசாரித்தார்கள், மறுநாள் காலை வீட்டிற்கு வந்து

விசாரித்தார்கள். என் கணவர் கொடுத்த புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சம்பவத்தை யாரெல்லாம் பார்த்தார்கள் என்று சொல்லியுள்ளேன். புகார் கொடுத்து பின்னர் நாங்கள் வீட்டிற்கு சென்று சேர இரவு 01.00 மணி ஆகிவிட்டது. நாங்கள் புகார் கொடுத்த பிறகு அன்று போலிசார் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரிதான். மறுநாள் காலை சம்பவ இடம் வந்தார்களா என்றால் வந்தார்கள். போலிசார் வரும்போது நாங்கள் 5 பேர் இருந்தோம். அந்த 5 பேரும் என்னுடன் வேலை செய்பவர்கள். இவர்களை தவிர வேறு யாரும் இல்லை. சம்பவ இடத்திலிருந்து போலிசார் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றவில்லை.

2. போலிஸ் விசாரணையில் 2ம் எதிரி நவீன் என்பவரிடம் 2 நாள் டைம் கேட்ட விவரத்தை சொல்லியுள்ளேன். கொன்னுவிடுவதாக மிரட்டிய விவரத்தை போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன். போலிஸ் விசாரணையில் லோன் என் பெயரில் வாங்கியுள்ள விவரத்தையும் கூறியுள்ளேன். சம்பவத்திற்கு பின் லோன் தொகையை கட்டியுள்ளேனா என்றால் கட்டவில்லை. என்னுடைய கணவருக்கு பெரிதாக காயம் இல்லை என்பதால் மருத்துவமனைக்கு செல்லவில்லை. சம்பவத்தன்று என் கணவர் வீட்டிற்கு வந்த பிறகுதான் எதிரிகள் வீட்டிற்கு வந்தார்கள். எதிரிகள் 5 பேர் வந்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான்.

3. என் கணவரின் வலது பக்க கழுத்தை யார் பிடித்தது, இடது பக்க கழுத்தை யார் பிடித்தது என்று போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது கணவருக்கு குடிக்கும் பழக்கம் உள்ளது

என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், என் கணவரை யாரும் அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது உள்நோக்கமே தவணைத் தொகையை சரியாக கட்டக்கூடாது என்பதற்காக பொய்புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் சம்பவத்திற்கு பின்னிட்டு இதுநாள் வரை லோன் தவணை கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. இதுநாள் வரை கட்ட வேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

**1 மற்றும் 2–ம் எதிரியின் தரப்பில் செய்த குறுக்கு விசாரணை 3–ம் எதிரியின் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/– G. Amirdham, 17.02.2026
Judicial Magistrate,
Kotagiri

**Document details**

| வ. எண். | தேதி | ஆவணங்கள் விரவம் | | குறியீடு விவரம் |
|---|---|---|---|---|
| 1. | - | Marriage Invitation | Original | Ex.A.1 |
| 2. | - | Birth Certificate :(Nos) | Xerox Copy | Ex.A.2 |
| 3. | - | Aadhar of Petitioner | Xerox Copy | Ex.A.3 |
| 4. | - | Complaint given to Chief Minister, Superintendent of Police, Aavadi, Chennai. | Xerox Copy | Ex.A.4 |
| 5. | 15.07.2025 | Legal notice | Original | Ex.A.5 |
| 6. | - | Return Postal Cover. | Original | Ex.A.6 |

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Judicial Magistrate,**
**Kotagiri**